[2003 ஜனவரி 31

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது, பதினொன்றாவது மற்றும் பன்னிரண்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சார்பாக திரு. ப. இராஜரெத்தினம்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, 2002—2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 131 முதல் 133 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002—2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது முதல் எண்பத்து எட்டாவது வரையிலான 16 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரனுக்குப் பதிலாக திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் அளிப்பார்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

2003 ஜனவரி 31] [திரு. கே.எஸ். தென்னரசு]

அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, 2002—2003—ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது முதல் பதிமூன்றாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 12—வது பேரவையின் 2001—2003 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதினைந்தாவது முதல் பத்தொன்பதாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, திரும்பப் பெறுதல். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"7—5—2002 ஆம் நாளன்று அறிமுகம் செய்த, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) திரும்பப் பெற அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.